

# மெட்ரோ ரயில் 2ம் திட்டத்துக்கு ரூ.3,100 கோடி

மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டத்துக்கு, தமிழக பட்ஜெட்டில், 3,100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- சென்னை, மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டத்தில், மூன்று வழித்தடங்களில், 118.9 கி.மீ.,க்கு ரயில் பாதைகள் அமைக்கப் பட உள்ளன.

முதல் கட்டமாக, மாதவரம் – சென்னை புறநகர் பஸ் நிலையம், மாதவரம் – சோழிங்கநல்லூர் வரை, 52.01 கி.மீ., பாதை அமைக்க, நிதி உதவி வழங்க, ஜப்பான் பான்னாட்டு கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்துள்ளது.

விரிவான திட்ட வடிவமைப்புகள் தயாராக உள்ளதால், இத்திட்டத்திற்கான கட்டுமான பணிகள் விரைவில் துவங்கப்படும்

- இரண்டாவது திட்டத்தில் மீதமுள்ள, சென்னை புறநகர் பஸ் நிலையம் – சோழிங்கநல்லூர், சோழிங்கநல்லூர்–சிறுசேரி சிப்காட், கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி பைபாஸ் சாலை வரை, மெட்ரோ ரயில் பாதை அமைக்க, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய வளர்ச்சி வங்கி ஆகிய, பன்னாட்டு நிதி நிறுவனங்களிடம் இருந்து, நிதி திரட்டும் பணிகள் நடந்து வருகின்றன
- சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட திட்டத்திற்கு, மத்திய அரசு, 50 சதவீதம் பங்கு மூலதனம் வழங்கியது போல், இரண்டாவது கட்ட திட்டத்துக்கும், 50 சதவீதம் பங்கு மூலதனம் வழங்க, மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கப் பட்டுள்ளது
- சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டத்துக்கு பங்கு மூலதன உதவி, சார்நிலை கடன் மற்றும், வெளிநாட்டு கடனை விடுவிப்பதற்காக மொத்தம், 3,100 கோடி ரூபாய், பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.